1982 பிப்ரவரி 10]

உத்திர மேரூர் ஏரியை விரிவு படுத்தும் திட்டம்.

*வினா எண். 137—திரு ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் ஏரியை ஆழப்படுத்தவும் வலுப்படுத்தவும் அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: உத்திரமேரூர் ஏரியை விரிவுபடுத்தும் திட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. முன்னுரிமை பெற்ற திட்டங்களின் மீதான ஆய்வுகள் முடிவுற்றபின், உத்திரமேரூர் ஏரியை விரிவுபடுத்தும் திட்டம் தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களால் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்திரமேரூர் ஏரியை விஸ்தரிக்கும் திட்டம் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டதாகச் சொன்னார்கள். ஏன் நிறுத்தி வைக்கப்பட்டது? அதோடு இந்த ஏரியின் கொள்ளளவு எவ்வளவு என்பதோடு இதன் மூலம் எத்தனை ஏக்கர்கள் பயன் பெறும் என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, இந்த உத்திரமேரூர் ஏரியில் பதிவு செய்யப்பட்ட பாசனப் பரப்பு 5,448.22 ஏக்கர்கள் ஆகும். ஆனால் சராசரியாக 4,978.77 ஏக்கர் வரையிலும் பயிரிடப்படுகிறது. அதனால்தான் இதைத் தனியாக இப்போது உடனடியாக எடுக்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. மேலும் இதை சீர்திருத்த வேண்டும் என்று சொன்னால் 30 இலட்சம் ரூபாய் செலவு செய்ய வேண்டும் என்று இருக்கிறது. அதற்காக 200-க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்களை ஆர்ஜிதம் செய்ய வேண்டி இருக்கிறது. அதைவிட ஏரிகளை நவீனப்படுத்துகின்ற திட்டத்தை எடுத்துச் செயல்படுத்தும்போது இதையும் கவனிக்கலாம் என்று அரசு கருதுகிறது.

(முற்பகல் 10-00)

வடமாமாந்தூரில் மேற்கொள்ளப்பட்ட கனிவள ஆராய்ச்சி

*வினா எண் 138—திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டம் வடமாமாந்தூரில் கனிவள ஆராய்ச்சி செய்யப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) 1975-76-ஆம் ஆண்டுகளில் இந்திய அரசு நிறுவனமான பாரத தங்க சுரங்கங்கள் லிமிடெட் (Bharat Gold Mines Ltd.) பூர்வாங்க சோதனைகளை மேற்கொண்டது. இச்சோதனைகளின்போது ஒரு சுரங்க வழியினையும் (Adit Level) 30மீ ஆழ இடைவெளியில் இரு சமதள சுரங்கத்தினையும் அமைத்து இந்திய சுரங்க அமைப்பினரால் (Indian Bureau of Mines) மாதிரிகள் சேகரித்து ஆய்வு செய்தது. மேற்படி ஆய்வின் மூலம் இப்பகுதியில் உள்ள படிவமானது குறைந்த கன்டெண்ட் உள்ளது என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இப்படிவத்தைப் பயன்படுத்த இயலாது என ஆய்வுப் பணிகள் கைவிடப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு, வினா—விடை நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. எஸ். சிவராமன் : தலைவர் அவர்களே, இந்தக் கனிவள ஆராய்ச்சி கைவிடப்பட்டது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது தற்சமயம் எந்த நிலையில் இருந்து கொண்டு இருக்கிறது? அது நல்ல முறையில் இருக்கிறது என்று ஜப்பான் நாட்டுக்காரர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, தமிழ்நாடு அரசு அதைப்பற்றி மீண்டும் ஆராய்ச்சி செய்வதற்கு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற நிலைமை கைவிடப்பட்டுவிட்டது என்பதுதான். மாண்புமிகு உறுப்பினரின் வேண்டுகோளை ஏற்று அந்தப் பகுதியில் தமிழ்நாடு ஜியாலஜி துறை மூலம் ஆய்வு செய்ய முயற்சிகள் மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 139 மற்றும் 140 ஒன்றாக எடுத்துக் கொள்ளப்படும்.

தருமபுரி, புதுக்கோட்டை மாவட்டங்களில் நூற்பாலைகள் ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண் 139—டாக்டர் கே. சமது : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

தருமபுரி மாவட்டத்தில் ஓர் நூற்பாலை ஏற்படுத்த ஏதேனும் செயல் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : ஆம். தர்மபுரி மாவட்டத்தில் சுமார் ஏழு கோடி ரூபாய் செலவில் ஒரு நூற்பாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.